**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 258/2017**

**Deposition of P.W. 11**

Name : திரு. மகிலன்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**20.11.2024**

Accused Present

<u>முதல் விசாரணை</u>–

நான் சுவாமியார்மடம் ரத்னா மெமோரியல் மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.08.2012ம் தேதி இரவு 11.30 மணிக்கு பணியில் இருந்த போது காட்டாத்துறை வாழ்வச்சகோஷ்டம் செல்லதுரை என்பவரது மகன் 31 வயதுடைய விஜு என்பவர் அவரது நண்பர் ரமேஷ் என்பவருடன் சிகிச்சைக்காக வந்தார். அவர் என்னிடம் தெரிந்த நபரால் அரிவாள் கொண்டு தாக்கப்பட்டதாக கூறினார். அவரை நான் பரிசோதித்த போது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தன.

1) முன்தலை பகுதியில் 10 x 6 x 5 cm அளவிலான வெட்டுக்காயம் இருந்தது.

அவருக்கு ஸ்கேன் பரிசோதனை செய்த போது மேற்படி 1வது

காயத்தில் எலும்பு முறிவு இருந்தது. மேலும் மூளையின் முன்பகுதியில் ரத்தக்கட்டுடன் கூடிய வீக்ககாயம் காணப்பட்டது. அவருக்கு வெளிக்காயத்திற்கு தையல் போடப்பட்டது. 30.08.2012ம் தேதியன்று மருத்துவ சிகிச்சையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். அந்த காயச்சான்று அ.சா.ஆ.6. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பிற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.